2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

இராமேஸ்வரம் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றவர்களை இலங்கை மீனவர்கள் கடத்திச் சென்றுள்ளதாகக் கூறப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். விஜயராகவன் அவர்கள், இராமேஸ்வரம் கடற் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் இருவர் கடந்த ஏப்ரல் 15ஆம் தேதி இலங்கை மீனவர்களால் கடத்திச் செல்லப்பட்டு, தலைமன்னாரில் காவலில் வைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி ஓர் அறிவிப்பைக் கொடுத்துள்ளார். அது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏப்ரல் 15ஆம் தேதி, இராமேஸ்வரம் கடற் கரைப் பகுதியிலே மீன் பிடித்துக்கொண்டிருந்த, மெகனைஸ்டு போட்டில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்கள், 5 பேரை இலங்கை மீனவர்கள் பலவந்தமாகக் கடத்திச் சென்று, 2 பேரை அங்கே சிறை வைத்து விட்டு, 3 பேரை விடுதலை செய்திருக்கிறார்கள். தலைமன்னாரில் இருக்கக்கூடிய Pearls Fisheries Social Development Village Level Organisation என்று சொல்லக்கூடிய மீனவர் அசோசியேஷனில் அவர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கே டிடெயின் செய்யப்பட்டு, வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது. குறிப்பாக இராமேஸ்வரம் பகுதியிலே, மண்டபம் பகுதியிலே மீன் பிடிப்பதற்கான சூழ்நிலை, நல்ல சூழ்நிலையாக இல்லை. இரண்டு நாடுகளுக்கு இடையிலுள்ள கடலில் மீன் பிடிப்பதில் அடிக்கடி தகராறு வருவதும், இலங்கை அரசின் சார்பில் அங்கே இருக்கக்கூடிய மோட்டார் போட்டில் வரக்கூடியவர்கள் நம்முடைய மீனவர்களைத் தடுப்பது மட்டுமல்லாமல், அங்கேயுள்ள நேவி இருக்கிறதே, அவர்கள்கூட நம்முடைய மீனவர்களை விரட்டுவதும், சுடுவதுமான நிலைமை இருக்கிறது. சுமுகமான நிலைமை கடந்த காலங்களில் ஏற்பட வில்லை. இது தொடர்ந்து நடந்துகொண்டு வருகிற நிலையாக இருப்பதால், இதை நீடிக்க விடாமல், அதற்கு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டும். கடத்திச் செல்லப்பட்ட மீனவர்களை மீட்டு வரவும், இது போன்ற நிலைமைகள் மீண்டும் உருவாகாமல் இருக்கவும் விவாதிக்க இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். விஜய ராகவன் அவர்கள் தந்துள்ள இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தின் மீது ஒரு சில விவரங்களைத் தர விரும்புகிறேன்.

இந்த நிகழ்ச்சி, நமக்குத் தரப்பட்டுள்ள தகவல்களின்படி பதிலுக்குப் பதில் என்பதைப்போல் நடந்த சம்பவமாக விவரிக்கப் படுகிறது. கடந்த 6–4–1989 அன்று இலங்கையைச் சேர்ந்த முஷன் என்னும் மீனவரும் கோம்ஸ்மூர்த்தி என்ற மற்றொரு மீனவரும், இராமேஸ்வரம் கோதண்டராமர் கோயிலுக்குக் கிழக்கே, சுமார் ½ கிலோமீட்டர் தொலைவில் காலை 9–45 மணி அளவில் சந்தேகத்திற்கு இடமான சூழ்நிலையிலே—அவர்கள் இந்தியாவுக்குள் நுழைய எந்த அனுமதியும் இல்லை என்ற காரணம் கூறப் பட்டு—கைது செய்யப்பட்டு, இராமேஸ்வரம் காவல்நிலைய குற்ற எண் 253,254/1989—பிரிவு 14 ஃபாரினர்ஸ் ஆக்ட், 6–ஏ பாஸ் போர்ட் ஆக்ட் ஆகியவற்றின்கீழ் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகும், அதன் மோட்டாரும் இராமேஸ்வரம் கடல் படையினர் வசம் வைக்கப் பட்டன. இந்த நிகழ்ச்சி நடைபெற்ற பிறகு அதாவது இலங்கை மீனவர்கள் பாஸ்–போர்ட் இல்லாமல் இந்தியப் பகுதிக்குள் வந்தார்கள் என்ற காரணத்தால் கைது செய்யப்பட்டு வைக்கப் பட்ட பிறகு—15–4–1989 அன்று சுமார் 11-45 மணி அளவில் இயந்திரம் பொருத்திய இந்திய நாட்டுப் படகு ஒன்று தனுஷ்கோடி கடற்கரையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தது. அந்தப் படகில் அதன் உரிமையாளரான தாசன் மற்றும் 4 மீனவர்கள் இருந்தார்கள். அப்போது தலைமன்னாரைச் சேர்ந்த மூன்று இலங்கை மீன்பிடி படகுகள் அந்த இந்திய மீன்பிடி படகைத் தலைமன்னாருக்குக் கடத்திச் சென்றன. தலைமன்னாரை அடைந்தவுடன் இந்திய மீன்பிடி படகிலிருந்த போசீஸ் என்ற மீனவரையும் மற்றும் எம். ராஜு என்ற மீனவரையும் 5 மீன்பிடி வலைகளையும் நிறுத்தி வைத்துக்கொண்டு மீன்பிடி படகினையும் மற்றும் 3 மீனவர்களையும் விடுவித்து அனுப்பி இருக்கிறார்கள். இலங்கையைச் சேர்ந்த 2 பிளாஸ்டிக் படகுகளையும் அவர்கள் நாட்டைச் சேர்ந்த மீனவர்களையும் இந்த கடற்படையினர் 6-ம் தேதி பிடித்து வைத்திருப்பதை விடுவித்தால்தான் இந்த இரண்டு பேர்களையும் விடுவிப்பதாகத் தெரிவிப்பதாக இராமேஸ்வரத்தில் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் 18–4–1989 அன்று தந்திச் செய்தி மூலமாக நம்முடைய மீன்துறை இயக்குநருக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார். தகவல் கிடைக்கப் பெற்ற உடன் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரை, இந்த இரண்டு இந்திய மீனவர்களையும் விடுவிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கும் படி தந்தி ஒன்றின் மூலம் மீன்துறை இயக்குநர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இராமேஸ்வரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் இதுபற்றிய தகவலை 19–4–1989 மாலை 5-25 மணிக்குத் தொலை அச்சுச் செய்தி மூலமாக மீன்துறை இயக்குநருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற்படை பிடித்து வைத்துள்ளதாகக் கூறப்படும் இலங்கை மீனவர்களைப் பொறுத்தமட்டில் தேவையானால் கப்பல் படையோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள பொதுத் துறையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனவே இந்த இரண்டு சாராரும் இதைச் சிந்தித்துப் பார்த்து, அங்கே இருந்து யாராவது இங்கே வந்து கைது செய்யப்பட்டிருந்தால் அவர்களை விடுவிக்கவும் அதைப்போலவே அங்கே கைது செய்யப்பட்டிருக்கிற மீனவர்களை விடுவிக்கவும் அரசு மேற்கொண்டு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தலைவர் அவர்களே தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இதை விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

3. தகவல் கோரல்.

(அ) துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைத் துறைமுகத்தின் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாக நேற்றைய தினம் துறைமுகப் பொறுப்பாளரால் அறிவிக்கப்பட்டு, இன்றையதினம் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. சென்னை உட்பட இந்தியாவில் உள்ள அத்தனைத் துறைமுகங்களிலும் ஐந்து அகில இந்திய சம்மேளனங்களுடைய அறைகூவலுக்கிணங்க வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது.

(முற்பகல்—10.10)

அவர்களுடைய ஊதியக் கோரிக்கை சம்பந்தமாக, அந்த வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. ஏற்கெனவே பொதுத் துறையில் இருக்கிற ஊழியர்களுக்கு வழங்குகிற ஊதிய உயர்வுக்குச் சமமாக—பேரிட்டி—கேட்டு அந்த வேலை நிறுத்தத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். 24ம் தேதி ஒரு பேச்சு வார்த்தை மத்திய தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் நடைபெறும் என்று சொன்னது கூட இன்றைக்கு ரத்து செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய ஒரு புதிய தடைச் சட்டம் கொண்டுவரப்படும் அல்லது ஏற்கெனவே உள்ள இன்றியமையாப் பணிகள் தடைச் சட்டத்தின்கீழ் தடை செய்யப்படும் என்று அங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த ஊழியர்களுக்கு மிரட்டல் விடுத்துள்ள செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. இன்றைக்குக் நெருக்கடி நிலைமை அல்லது அவசர நிலைமை என்பது, stevedore